[2002 அக்டோபர் 30

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் முதல் பிரசவத்தில் 2 பெண் குழந்தைகள் பெற்றாலும் அல்லது 2-வது பிரசவத்தில் 2 பெண் குழந்தைகள் பெற்றாலும்கூட அவர்களை இந்தத் திட்டத்திலே ஏற்றுக்கொண்டு இந்தத் திட்டத்தின் சலுகைகள் வழங்கப்படும் என்பதை அம்மா அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 78, திரு. என்.ஆர். ரங்கராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

78—

போக்குவரத்து அலுவலகம்

***9848—திரு. என்.ஆர். ரங்கராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையில் மண்டலப் போக்குவரத்து அலுவலகக் கிளை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் தொடங்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டையில் புதிய பகுதிநேர மண்டலப் போக்குவரத்துக் கழக அலுவலகம் தொடங்க தற்போது வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

திரு. என்.ஆர். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதியைப் பொறுத்தவரையிலே, சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தனியார் வாகனங்கள், சுமார் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்கள், தனியார் பேருந்துகள், லாரிகள் மற்றும் மினி வேன்கள் கிட்டத்தட்ட 1500-க்கும் மேற்பட்டவை அந்தப் பகுதியில் ஓடிக்கொண்டு இருக்கின்றன.

2002 அக்டோபர் 30]

அதுபோலவே ஓட்டுநர் உரிமம் பெற்றவர்கள், தொகுதியைப் பொறுத்தவரையிலே கிட்டத்தட்ட 50 ஆயிரம் பேருக்கு மேல் உள்ளார்கள்; இவர்கள் ஒவ்வொரு முறையும் பதிவுக்கோ, வாகனங்களைப் புதுப்பித்து லைசென்ஸ் பெறுவதற்கோ தஞ்சைக்குச் செல்ல வேண்டியுள்ளது. பட்டுக்கோட்டையிலே இருந்து தஞ்சைக்குப் போகவும், வரவும் கிட்டத்தட்ட 200 கிலோமீட்டர் வருகிறது. எனவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டை பகுதி மக்களுடைய கோரிக்கையான இந்த R.T.O. அலுவலகத்தை வரக்கூடிய காலங்களிலாவது தொடங்க முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் புதிய பகுதி அலுவலகம் அமைப்பது தொடர்பான கருத்துரு பகுதி 2 திட்டம் 2001-2002-ல் பரிசீலிக்கப்பட்டது. அரசின் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு தற்போது புதிய அலுவலகங்கள் கட்டுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தப் புதிய அலுவலகம் அமைப்பது தொடர்பாக தற்போது வாய்ப்பு ஏற்படவில்லை. இருந்தபோதும், தற்போது வாய்ப்பு இல்லை என்றுதான் குறிப்பிட்டிருக்கிறோமேதவிர, எப்போதும் வாய்ப்பு இல்லை என்று நாங்கள் சொல்லவில்லை. புரட்சித் தலைவியினுடைய அரசு நிச்சயமாக நிதிநிலைமை சீரடைந்த பின்பு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 79, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

79—

கட்டடம்

***19915—திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?